
# நபியமுதம்

( பாவண்ணத் தொகுதி )



கவிஞர் பதியதளாவ பாறூக்

# கவிஞரின்
# காத்திருக்கும் கை நூல்கள்

| | |
|---|---|
| நல்லறங்கள் | ஈரடிக் கவிதை |
| கை விளக்கு | கருத்துரைத் தொகுதி |
| மண்வாசம் | கவிதைத் தொகுதி |
| மனத் தூது | சிறுகதைத் தொகுதி |
| தெரு விளக்கு | கட்டுரைத் தொகுதி |
| ஆதர பஹன<br>(அன்பு விளக்கு சிங்களம்) | கவிதைத் தொகுதி |
| மவ் Bபிம<br>(தாய் மண் சிங்களம்) | புதுக் கவிதைத் தொகுதி |

எம்மக்கள் இருப்புக்காய் என்றும்
என்னெழுது கோல் தாழ்மீது தவழும்
இம்மண்ணில் இலக்கியம் விதைக்கும்
என்னிதயமும் எண்ணியே வாழும் !

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்

# நபியமுதம்

## (பாவண்ணத் தொகுதி )


### கவிஞர் பதியதளாவ பாறூக்



வெளியீடு
பாவலர் பண்ணை
ஷரீப் சட்டத்தரணி வீதி
காத்தான்குடி-02.
(பதிவு இல: 185-2002)

| | |
|---|---|
| நூலின் பெயர் | நபியமுதம் |
| ஆசிரியர் | பதியதளாவ பாறூக் |
| முதற் பதிப்பு | 26.10.2010 |
| பதிப்புரிமை | ஆசிரியருக்கு |
| அச்சுப் பதிவு | நூன் அச்சகம் |
| கணனி வடிவம் | மௌலவி SA. சப்றாஸ் (பலாஹி) |
| பிரதிகள் | 500 |
| பக்கங்கள் | 24 |
| விலை | விற்பனைக்கில்லை |
| ISBN | 978-955-52920-0-9 |
| தொலைபேசி | 063-2246009 |
| அலைபேசி | 077-4668012 |


# சமர்ப்பணம்

எனையீன்று
ஈ எறும்பில் காத்து
இரண மூட்டி
எந்தனை வளர்த்து
அறிவுக்கோலை
அடியேனுக் களித்து
இந்த மண்ணில்
இனங்காண வைத்த
என் பெற்றோர்களுக்கு
இப்பாவண்ணம்
சமர்ப்பணம் !

# வெளியீட்டுரை !

கண்ணியப் பதியாம் காத்தமா நகரின் இலக்கியப் பரம்பரையின் இளைய தலைமுறையின் மூத்த கவிஞர் பதியத்தளாவ பாறூக். இவருடைய கவித்துவம் அழகு மிக்கது. இவர் வடிக்கின்ற மரபுக்கவிதை, புதுக்கவிதை, கவிதை நறுக்கு எதுவாக இருந்தாலும் அதற்குள் ஒரு அழுத்தத்தையும் ஆழுமையையும் காணலாம். புதிய புதிய சொற்களை சிறைபிடித்து தனது மனத்தகத்துள் வைத்துக்கொண்டு கலை உள்ளங்களுக்கு உண்ணத்தருகிறார். அது ஒரு வகையின்பம். "கலாபூஷணம்" விருது பெற்ற கவிஞர் பதியத்தளாவ பாறூக் அவர்கள் இதுவரை யதார்த்தங்களையும் சமுதாய நோக்கங்களையும் கொண்டெழுதிய அவரின் கவிதைகளை ஒன்றுதிரட்டி ஒரு கவிதைத் தொகுதியாக வெளியிட்டிருந்தால் நிச்சயமாக அன்னூலுக்கு சாஹித்திய மண்டலப் பரிசு கிடைத்திருக்குமென்பது அடியேனின் அவதானம்.

பாவலர் பண்ணையின் பாசறையில் வளர்ந்த கவிஞர் அவர்கள் நவ இலக்கிய மன்றத்திலும் ஓர் அங்கம். இம் மண்ணில் எடுத்தடிவைத்து ஐம்பதாண்டை கொண்டாடும் இப் பொன்விழாவில் கவிஞர் பாறூக் அவர்கள் "நபியமுதம்" என்னும் இன்னூலை இலவசமாக வெளியிட முன்வந்தமை இவர் நவ இலக்கிய மன்றத்தில் வைத்திருக்கும் கணிப்பையும் இலக்கியத்தின் மீது கொண்டிருக்கும் காதலையும் எடுத்தோதுகிறது.

தனது கன்னி வெளியீடான நபிகளார் (ஸல்) அவர்களின் அறப்போதனைகளை அடித்தளமாய்க் கொண்ட இம்மலரை ஆரம்ப நூலாக வைத்து இவருடைய ஆக்கங்கள் அனைத்தும் அச்சுருவாக வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**புதியதைப் பதியவைக்கும்**
**பொற்கவிஞர் மத்தியிலே**
**பதியத்தளாவையார் ஒரு பதக்கம்**

**கலை இலக்கியக் காவலர்**
**பாவலர் சாந்தி முஹியித்தீன்**
**12.10.2010**



# எனது பக்கம்

நான்கு தசாப்தங்களாக
நடந்து வரும்
எனது
இலக்கியத் தாய்
கன்னி ஓடமாய்
கரை சேர்க்கும்
பாச நபிக்காய்
பங்களிப்பாகும்
பாக்கள் இது !

இறைத் தூதர் பற்றி
எண்ணி நான்
எழுதும் போதெல்லாம்
எழுதுகோல் இனித்தது
அதனால்தான்
அமுதத்தை
அண்ணலுக்காய் படைத்து
நபியமுதத்தை
நானிங்கு தந்தேன் !

இதில் வரும்
பாக்கள் பலதுக்கும்
பக்கங்கள் தந்த
பத்திரிகை "விடிவெள்ளி"க்கும்
அதன் ஆசிரிய பீடத்தின்
அன்புச் சோதரன்
எம்.பீ.எம். பைறூஸ்
வெளியீட்டுரை தந்த
பாவலர் சாந்தி முஹியித்தீன்
பின் அட்டைக்கு

பெருமை சேர்த்த
கலா ஜோதி மௌலவி
காத்தான்குடி பௌஸ்
அழகுக்கு அணிசெய்து
அச்சிட்டுத் தந்த
நூன் அச்சகத்தார்
கணனி மூலம் வடிவம் சமைத்த
மௌலவி சப்றாஸ் ஆகியோர்களுக்கு
அடியேனகத்து ஆழ நன்றிகள் !

ஆமாம் !
விண்ணுலக நபியை
விலைக்குள்ளடக்கி
விற்பனையாக்க
விரும்பாத நெஞ்சு
அமுத நூலை
அன்பளிப்பாக்கி வைப்பதில்
ஆனந்தப் படுகிறது
நூர் முஹம்மதுக்கு
இங்கே
நூறு பாக்கள்
எல்லாப் புகழும் இறைக்கே
அல்ஹம்துலில்லாஹ் !

யாசித்தல்
வறுமையைத் தெருவாக்கும்
வாசித்தல்
மனிதனை உருவாக்கும்

அன்புடன்
பதியதளாவ பாறூக்
104. பிரதான வீதி
பதியதளாவ
தொலைபேசி : 063-2246009.

# அண்ணலுக்கோர் அஞ்சலி

நாயகமே
உங்களின்
பிறப்பை எண்ணி
பெருமைப் படுவதில்
நாங்கள் மட்டுமல்ல
உலகத்
தேசத்தின் தெருவெல்லாம்
சேர்ந்து கொள்கிறது
ஏனெனில் நீங்கள்
உலகைத் திருத்த வந்த
உத்தமர் என்பதால் !

ஓ.....அன்று
அஞ்சான இருளின்
அதிகார ஆட்சியை
அடியோடு சாய்த்து
இறை ஒளியை
ஏற்றி வைத்த
ஈருலகத்தின்
இறை நேசர்
நீங்களல்லவா !

யாரஸுலுல்லாஹ் !
உலக ஜோதியாய்
உத்தமரே
நீங்கள் தோன்றிய போது
கலவரங்களும்
காடைத் தனங்களும்
அந்த எஹுதிகளிடமிருந்து
விடை பெற்று விட்டகன்று
நீங்கள் விதைத்த
லாஇலாஹ இல்லல்லாஹ்
என்ற
மூல மந்திரம்
முஸ்லிமாக்கி வைத்த
முழுக்கதையிலும்
படிந்து
படித்துணர வைத்திட்ட
பக்குவப் பாடங்கள்தான்
எத்துணை ! எத்துணை !

அன்பு நபியே !
அந்த
ஐயாமுல் ஜாஹிலிய்யாவின்
அறியாமைக் காலத்தின்
மாசகற்றி
மாக்களாய் வாழ்ந்த
மக்களை எல்லாம்
மனிதப்
பூக்களாய் இங்கே
புஷ்பிக்கச் செய்த
அந்த
வரலாற்று உண்மைகளை
சன்மார்க்கப் புத்தகத்தில்
சரித்திர மாக்கிவைத்த
சர்தாரல்லவா நீங்கள் !

ஓ......அண்ணலே !
நீங்கள்
நடந்து வந்த பாதையில்
கடந்து வந்த
கஷ்டமான தடங்களை
எந்தன்
எண்ணக் கரங்கள்
தடவிப் பார்க்கின்றன
ஓ......அங்கேதான்



# அண்ணலுக்கோர் அஞ்சலி

எத்துணை சோதனைகள் !
எத்துணை வேதனைகள் !!

ஆமாம் !
மூலக் கலிமாவுக்குள்
முஹம்மதே
உங்களை வைத்துத்தானே
அந்த
ஆலம் படைத்தவன் கூட
ஆழக் கலிமாவை
எங்களுக்கு
அணி செய்து வைத்தான் !

அது மட்டுமா ?
முஹம்மதை படைத்திராவிட்டால்
மண்ணையும்-விண்ணையும்
ஏன்
இந்த உலகத்தையே
படைத்திருக்க மாட்டேன்
ஓ............அந்த
ஹக்கனின்
கடுஞ் சத்தியங்கேட்டு
எந்தன்
இதயங் கூட
நடுங்குகிறது நாயகமே !

நபியே !
வாச மரத்தின்
வண்ண மலர் நீங்கள்
உங்களின்
நேசம்
நினைவு
அனைத்தும்
எந்தன்
இதய வீட்டில்
இருந் தெரியும்
அணையா விளக்குகள் !

உங்களின்
அன்பு-அடக்கம்
பண்பு பாசம்
இறையச்சம்
இவைகளுக்கு ஈடாக
எதை எடுத்துக் காட்டுவேன்
உங்களின்
இதயச் சிறப்புகளை
எடுத்தியம்பும் சக்தி
இந்த
எழுது கோலுக்கில்லை
நாயகமே !

ஆமாம் !
அண்ணலே உங்களின்
ஆழப் பணிகளையும்
அழகு முன்மாதிரியையும்
எண்ணி எழுதும் போது
அடியேனின்
அகம் மட்டுமல்ல
ஆத்மா கூட
இங்கே என்றும் உங்களுக்கு
அஞ்சலி செய்கிறது !

நன்றி 1992 - அரச தேசிய
மீலாத் விழா அனுராதபுரம்
சிறப்பு மலர்.

# வாழ்த்துரையில் வள்ளல்

ஆதி முதலாய் நின்று
அருள் செய்யும் றஹ்மானே
ஓதிப் புகழு மெந்தன்
உதவி செய் பாக்களுக்கு !

வல்லானே உன்ன ருளால்
வாழ்த்துகிறேன் நபி மணியை
எல்லாமே காத்த ருளும்
ஏக நிறை அல்லாஹ்வே !

மக்கத்து மா மணியே
மங்காத மாணிக் கமே
ஹக் கனின் தூதுவரே
கருணை நபி நாயகமே !

மாசில்லா மணி விளக்கே
மனிதருள் மரக தமே
நேசிக்கும் இதயந் தனில்
நின்றி லங்கும் நாயகமே !

வானத்து நிலவே எங்கள்
வையகத்துப் பூ மலரே
ஞாலத்தின் அருள் கடலே
நாதர் நபி நாயகமே !

நெஞ்சத்துப் பெட்ட கமே
நேர் முத்துச் சட்டகமே
மஞ்சத்து மலர்ச் சரமே
மா நபிகள் நாயகமே !





# வாழ்த்துரையில் வள்ளல்

தொடர்..

திங்க ளொளிப் பிறப்பிடமே
தீனின் வழி இருப்பிடமே
மங்காப் புகழ் பூத்த
மாசறு நாயகமே !

தித்திக்கும் தேன் மலரே
தெவிட்டாத கனி ரசமே
புத்தியில் குடி கொண்ட
பூமான் நாயகமே !

கருணை விரி கடலே
கஸ்தூரி மண வுடலே
முருகுக் குண மிடமே
முஹம்மது நாயகமே !

சீரணி கொண் டவரே
சிறப்புகள் பூண் டவரே
பேரணி வென் றவரே
பெருமான் நாயகமே !

ஒளியில் உயர்ந் தவரே
உயிரில் கலந் தவரே
விழியில் நிறைந் தவரே
வேந்தர் நாயகமே !

கோனிறை எங்கள் தூதே
குறைகளைக் கொன்ற சாதே
பேணிறை வாழ்வு கண்ட
பேரின்ப நாயகமே

# வாழ்த்துரையில் வள்ளல் தொடர்..

நேர்மையின் வழியே நின்று
நீள்பணி செய்து வென்ற
கூர்மதி படைத்த எங்கள்
குவலயத்து நாயகமே !

வனிதையர் வாழ்க்கை தனில்
வழிதனைச் சொல்லி வைத்து
புனித மிகு கொள்கைதனை
போதித்த நாயகமே !

கல்வி சிறிது மின்றி
கல்விக்கே கடலாய் நின்று
எல்லையில்லாப் பணிகள் செய்த
ஏந்தலார் நாயகமே !

துன்பங்கள் வந்த போதும்
துய்யாது வாழ் வெய்தி
அன்பின் வழி நடந்த
ஆசை நாயகமே !

பாசத்தின் பந்த மதை
பங்காக்கி பதிவு மாக்கி
நேசத்தின் நிழலாய் நின்ற
நெஞ்சத்து நாயகமே !

மாசற்ற மார்க் கந்தனை
மானிடர் நெஞ்சங் களில்
வாசமாய் பூசி வைத்த
வைகறை நாயகமே !



தமிழமுதம்

# வாழ்த்துரையில் வள்ளல்

கடமைகள் ஐந்தெ டுத்து
கட்டாயக் கணிப்புக் கூறி
உடமைகள் அவைக ளென்று
உடனின்ற நாயகமே !

கலிமாதான் கண்க ளென்று
கண்டெடுத்து ஒளிவு பெற
சலியாது சொல்லி நின்ற
சாந்தியே நாயகமே !

அழும் நோய்கள் அண்டியும்
அமலோனை அஞ்சி நின்று
தொழும் விதியை விட்டிடாத
தூயவர் நாயகமே !

வருடத்தில் வரும் நோன்பின்
வரிசையைப் பேணி நின்று
குருவாகிக் குணம் சொன்ன
கூவின் நாயகமே !

மனம் போன வாழ்க்கையது
ம.ஃஷரில் துன்ப மாகும்
இனங்கண்டு எடுத்து ரைத்த
இமயம் நாயகமே !

நல்லதை எடுத்து நின்று
நாவினால் அதை மொழிந்து
அல்லாஹ்வை அஞ்சி நின்ற
ஆலம் நாயகமே !



பதியதளாவ பாறூக்

# பணிகண்ட பயகம்பர்

தடாகத்தில் வீழ்ந்த ஜெந்தை
தன்விரலால் எடுத்த போது
அடாவடி தொடர்ந்த காலை
அன்பு செய்த நாயகமே !

இருவிரலைக் காட்டி உடன்
ஏழையுடன் இருப் பேனென
கருணைக்கு வடிவங் கண்ட
ஹக்கன் நபி நாயகமே !

கூலியின் வியர்வைத் துளி
குடிகொண்டு வற்று முன்னே
வேதனத்தை வழங்கச் சொல்லி
விதந் துரைத்த நாயகமே !

கொடும் வறுமைக் கோடழிய
கோடரியை கொடுத்துக் கையில்
விறகுதனை வெட்டி வாழ
உறுதி சொன்ன நாயகமே !

புளித்த பழத்தை மாது
புசித்திடக் கொடுத்த போது
பழிக்காது புசித்துக் காட்டி
பண்பு சொன்ன நாயகமே !

அநாதையின் தலை தடவி
அருகிருந்து அன்பு காட்டி
குணத்தின் வடிவ மான
கோமான் நபி நாயகமே !



# பணிகண்ட பயகம்பர்

குப்பையை மேனி தனில்
கொட்டிய மாதைக் கூட
தப்பாது குசலம் கேட்ட
தாஹா நபி நாயகமே !

படுக்கையில் மலங் கழித்துப்
பாதகம் செய்த பாவி
தடுக்காது அவன் மனதை
தந்தெடுத்த நாயகமே !

தூசித்த காபி ரையும்
தூ என்று ஒதுக்காது
ஆசித்து அவன் மனதை
அரவணைத்த நாயகமே !

கொல்லும் கொடுங் கோலனையும்
குணத்திலே சிறப் பேந்தி
வெள்ளை உள்ள மதை
விரித்து வைத்த நாயகமே !

அன்னியோன் பூத வுடல்
அன்று சாலை வந்தபோது
கண்டதும் எழுந்து நின்று
கனம் செய்த நாயகமே !

மனைவியர் அனை வருக்கும்
மனங்கோணா சமத்து வத்தை
துணையாக்கித் தனை இணைத்த
தூய நபி நாயகமே !

நன்றி விடி வெள்ளி 25.02.2010

# பிறப்பும் சிறப்பும்

ஆமினா ஈன் றெடுத்து
அகிலத்தின் அருளாய் தந்த
காமிலாய் இறையோன் கண்ட
காசீம் நபி நாயகமே !

மக்கத்து மண் தொட்டு
மண்ணுலகு மகிமை காண
தக்க தொரு தலைவராக
தரணி வந்த நாயகமே !

அந்தகார இருள் அறுத்து
அகிலமது விடிவு காண
வந்துதித்து வழிகள் சொன்ன
வள்ளல் நபி நாயகமே !

மண்தோண்டிப் பெண் புதைத்த
மடமை கொண்ட காலமதை
கண்டு மனம் நொந்துருகி
கருணை சொன்ன நாயகமே !

கட்டில் சுகங் காணக்
கைதேடிய பெண் பலியை
தட்டித் துயர் துடைத்து
தகை சேர்த்த நாயகமே !

மதுவை குடித்து நின்று
மதியை இழந்து கொண்டு
துதி பாடிய செயல்களின்
துயர் அறுத்த நாயகமே !



# பிறப்பும் சிறப்பும்

கால் நடைக் குணங்களன்று
கைகோர்த்து நின்ற போது
மேல் ஒத்த போதனையால்
மேன்மை சொன்ன நாயகமே !

கோடிச் சுகந் தேடிக்
குணமழிக்க வந்த போது
சாடித் தன் கொள்கைதனை
சாதித்த நபி நாயகமே !

அன்னிய மதத்தா ரையும்
அணுகியே குசலங் கண்டு
தன்குணம் காத்து நின்ற
தாஹா நபி நாயகமே !

கட்டியே வயிற்றில் கல்லை
கடும்பசி தாங்கி நின்று
பட்டினிக்குப் பாடம் சொன்ன
பரிவு நபி நாயகமே !

புண் தொட்ட சமூகத்தின்
புரையோடும் பாவங் கண்டு
மண்ணிலத்தில் மனிதம் வாழ
மாண்பு சொன்ன நாயகமே !

பெண்களுக்கு மட்டும் அல்ல
பெரிதாக கற்பு உண்டு
ஆண்களுக்கும் அவைதா னென்று
அறம் சொன்ன நாயகமே !

நன்றி விடிவெள்ளி 19.03.2010



பதியதளாவ பாறூக்

# மூடத்தனமறுத்த முஹம்மத்

இல்லாத கொள்கை எல்லாம்
இணைந்தவை இஸ்லாம் அல்ல
பொல்லாத போக்கு நீக்கப்
போதித்த நபி நாயகமே !

பேயாடிப் பிணி தீர்க்கும்
பெரும் பிழையின் பீடுதனை
வாயெடுத்து சொல்லி வைத்த
வள்ளல் நபி நாயகமே !

குறிகளைக் கேட்டு நம்பி
குருடாக்கி அறிவு தனை
தறிகெட்டுப் போகும் வழி
தடுத்த நபி நாயகமே !

மந்திரங்கள் மாயா ஜாலம்
மனங்களைக் கெடுத்து விடும்
தந்திரத்தை தடுத்துச் சொன்ன
தாஹா நபி நாயகமே !

சாஸ்திரத்தை நம்பி வாழ்வை
சாக்கடையில் விழுத்தி டாமல்
கோத்திரத்தை காத்து நின்ற
கோமான் நபி நாயகமே !

சகுணங்கள் பார்த்து நின்று
சறுக்கியே விழும் நிலையை
பகுத்துணர்ந்து வாழ வேண்டி
பாடம் சொன்ன நாயகமே !



# மூடத்தனமறுத்த முஹம்மத்

பல்லியது கொட்டும் சத்தம்
பாதகமாய் எண்ணும் சித்தம்
நல்லதல்ல எனக் கூறி
நலந் தந்த நாயகமே !

இணை வைத்தல் இஸ்லாத்தில்
என்றுமே இல்லை என்று
துணைநின்று துயர் துடைத்த
தூதர் நபி நாயகமே !

இறையின் நாட்டப் படியே
எல்லாமே நடக்கு மென்று
நிறை சொல்லி மக்களை
நிறுத்திய நபி நாயகமே !

விதி எனும் கட்டளையை
விதித்தவன் இறைவ னாவான்
மதி ஏற்று வாழ்வதற்கு
மார்க்கம் சொன்ன நாயகமே !

நடப்பதை பொருந்திக் கொள்ளல்
நல்லவர் வழி களாகும்
கடப்பது கபோதிச் செயல்
கருத் துரைத்த நாயகமே !

அறிவுக் கண் திறக்குமால்
அந்தகன் புனிதனா வான்
உறுதியே ஈமான் வழி
உயர்வு சொன்ன நாயகமே !

நன்றி விடிவெள்ளி 11.06.2010

# சீருரையில் செம்மல்

புன்னகை எனும் மனிதப்
பூக்கு மிதழ்ப் பூவாகும்
வன்மையை வழங்கா தென்று
வரம்பு சொன்ன நாயகமே !

அண்டை அயல் வீட்டான்
அரை மஹருக் கொப்பாகும்
சண்டையின்றி சமமாய் வாழ
சாந்தம் சொன்ன நாயகமே !

பசியோடு வந்து கேட்கும்
பரம ஏழை மனங்கண்டு
புசித்திடக் கொடுத்து வைக்கப்
போதித்த நபி நாயகமே !

அந்தகன் வழி தவறும்
அவனது கரம் பற்றி
சொந்தமாய் அவனைக் காண
சொன்ன நபி நாயகமே !

வயோதிபரை வழியில் கண்டால்
வையாது மதித்து நின்று
தயவுதனை காட்டு மென்ற
தாழ்மை சொன்ன நாயகமே !

கொடு நோய் கண்டவரின்
குசலமது காணச் செல்லல்
படியுயர் தர்ம மென்று
பகர்ந்த நபி நாயகமே !



# சீருரையில் செம்மல்

தொடர்..

அவதூறு பேசி மனிதன்
அக மழியச் செய்திடல்
நவம் காணாச் செயலென
நவின்ற நபி நாயகமே !

பாதையிலே கிடந்து குத்தி
பாதங்களைப் பதம் பார்க்கும்
வேதனையாம் கல்லு முள்ளை
விலக்கச் சொன்ன நாயகமே !

நிழல்தரும் மரத்தை வீணே
நிற்பதை வெட்டி வீழ்த்தி
அழிப்பதை ஆ[illegible]காதென்று
ஆழம் சொன்ன நாயகமே !

அன்பளிப்பு செய் அழகு
அரவணைத்து உறவை என்றும்
பண்பாடு பாடு மென்று
பதிவு செய்த நாயகமே !

நாயதை உள்ளம் கட்டி
நாசத்தை வளர்த் தெடுத்தல்
தூயதைத் தூர மாக்கும்
துயர் சொன்ன நாயகமே !

மறையோனின் படைப்பி லிந்த
மனிதனே உயர்வி லுள்ளான்
நிறை கொண்ட கருத்தையிங்கு
நிறுத்திய நபி நாயகமே !

# சீருரையில் செம்மல்

தொடர்..

முஸ்லீமைக் காணுங் கால்
முகம் நோக்கி ஸலாமுரைத்தல்
இஸ்லாத்தின் ஏற்றம் என்று
இறுக்கம் சொன்ன நாயகமே !

என் பெயரைக் கேட்டதுமே
எவன் ஸலவாத் துரையானோ
அவன் பெருங் கஞ்சனென்று
அறி வித்த நாயகமே !

விளையாட்டாய் மனித னிங்கே
வீணாகப் படைக்க வில்லை
களம் காண எல்லோர்க்கும்
கனம் சொன்ன நாயகமே !

சந்தூக்கில் நாம் ஏறி
சாலைவழி வந்த பின்பு
எந்த விதத் துணையுமற்ற
இருப்பைச் சொன்ன நாயகமே !

மண் ணறையின் வேதனையை
மனிதனிங்கு உணர்ந்து வாழும்
புண்ணியத்தின் புனிதம் சொன்ன
பூமான் நபி நாயகமே!

வறுமையது வந்த போது
வழியொன்று பிறக்கும் வரை
பொறுமையுடன் இருக்கும் நிலை
புரியச் சொன்ன நாயகமே !



# சீருரையில் செம்மல்

எடுக்கின்ற எம் பணியில்
இணைந் தோதும் பிஸ்மியது
தடுத்து விடும் தீதுகளின்
தன்மை சொன்ன நாயகமே !

நல்லதை செய்வ தற்கு
நட்சத்திரம் நாட்க ளில்லை
எல்லாமே இறை செயலின்
இணக்கம் சொன்ன நாயகமே !

தலை மறைத்து செய்கடமை
தகாத நோய் தடுக்குமென்று
நிலையான றஹுமத்தின்
நிறைவு சொன்ன நாயகமே !

கைவாய் சுத்தம் செய்து
கருமமாம் உணவு உண்ணல்
மெய்யு ணர்வின் மேன்மைக்கு
மீட்சி சொன்ன நாயகமே !

இறை நினைவை நெஞ்சிலாக்கி
இரவு நேரத் தூக்கத்தின்
நிறை யருளின் நிலைகளுக்கு
நியதி சொன்ன நாயகமே !

பிறார்த்தனையைப் போல தொரு
பிழை பொறுக்கும் மருந்தில்லை
சிறாத்த லெனும் பாலமதின்
சிறப் புரைத்த நாயகமே !



புதியதளாவ பாறூக்

# வழிகாட்டலில் வள்ளல்

துஷ்டனைக் கண்டால் விலகி
தூரத்தில் ஒதுங்கிக் கொள்ளும்
இஸ்டத்தின் இலக்கைச் சொன்ன
இம்மை நபி நாயகமே !

சண்டைக்கு வருவோன் மனதை
சரணடையச் செய் வதற்கு
புன்னகை ஒரு மருந்தாம்
பொருள் சொன்ன நாயகமே !

பணத்தாசை பலதும் செய்யும்
பற்றுக்குள் வளரும் தீயக்
குணத்தாசை குடி யகற்ற
கொள்கை சொன்ன நாயகமே !

ஆட்சியாளர் தலை களுக்கு
அவசியம் இருக்கும் தர்மம்
சாட்சியாம் இறை வனிடம்
சட்டம் சொன்ன நாயகமே !

உண்ணல் குடித்தல் யாவும்
உட்கார்ந்து செய் வணக்கம்
பண்ணும் பலன் விளித்து
பாதை சொன்ன நாயகமே !

தொற்றுநோய் ஊரைப் பிடித்து
தொடரும் பிணக்கு முன்னால்
தற்காப்பு இல்லை என்று
தரகு சொன்ன நாயகமே !



# வழிகாட்டலில் வள்ளல்

தொடர்..

விபச்சாரம் கொடிய தீங்கு
வீற்றிருக்கும் இட மெல்லாம்
அபச்சாரம் பெருகி நிற்கும்
அழிவைச் சொன்ன நாயகமே !

அன்னியப் பெண்ணை நோக்கும்
அநாவசியப் பார்வைக் கெல்லாம்
சுன்னாவின் சுக மெடுத்துச்
சொன்ன நபி நாயகமே !

வட்டிக்குக் கொடுக்கும் பணம்
வண்ணமாய் விரிந்து நாளும்
குட்டிகளைப் போடும் பாவக்
குழந்தை என்ற நாயகமே !

இரத்தமதில் கலந்து ஓடும்
இப்லீசின் இன்னல் களை
சிரமொதிக்கி சீரில் வாழ
சிறப் புரைத்த நாயகமே !

பணத்தாசை கொண்டு பொருள்
பதுக்கியே லாப மீட்டும்
குணத்திலே குடி கொள்ளும்
குறை யறுத்த நாயகமே !

தனக்கென்ற தலைக் கனத்தை
தானாக வளரச் செய்து
மன மழியும் மாசு[illegible]க்கு
மாற்றம் சொன்ன நாயகமே !



பதியதளாவ பாறூக்

# வழிகாட்டலில் வள்ளல்

அறியாதோர் அக மெய்தில்
அனுமதி பெற் றேகல்
முறியாத ஒழுக் கத்தை
முன் வைத்த நாயகமே !

தலைமைத் தளத் திற்கு
தகுதியேதான் தலை யாகும்
நிலையுணர்ந்து ஏற்கச் சொன்ன
நேர்மை நபி நாயகமே !

பழிவாங்கும் படல மெல்லாம்
பாவத்தின் குழி களாகும்
விழிதிறந்து பார்க்கச் சொன்ன
விவேக நபி நாயகமே !

சமுதாயத் தெருவில் மனிதன்
சகலதுக்கும் விளக் காவான்
அமுதாய் கருத் துரைத்த
அண்ணல் நபி நாயகமே !







# இதயங்களிலிருந்து !

காத்தான்குடியின் மூத்த மன்றமான நவ இலக்கிய மன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவுக்கும், நினைவாக வெளிவரும் கலாபூஷணம் கவிஞர் பதியதளாவ பாறூக் (கலைநதி) அவர்களின் “நபியமுதம்” பாவண்ணத் தொகுதிக்கும் எங்களின் இதயத்து வாழ்த்துக்கள் !

ஹஸனிய்யா சம்றூஸ் ஹக்கீம்
ஹஸனிய்யா பானு ஹக்கீம்
16, கோட்டார் வீதி,
தர்ஹா நகர்.

ஐம்பதாவது ஆண்டின் நிறைவாக பொன் விழாக் காணும் நவ இலக்கிய மன்றம், நிறைவுக்கு நிவை சேர்க்கும் கவிஞர் பதியத்தளாவ பாறூக்கின் நபியமுதம் ஆகியவைகளுக்கு அன்பான வாழ்த்துக்கள்.

மலையக மண்ணில் மக்களைக் கவர்ந்த துணைக் கிளைகள் இல்லாத ஒரே ஒரு ஜவுளித் தளம் வெலிமடையில் “சத்தார்ஸ்”



# இலக்கிய விடியலில் இவன் முகம்!



காத்தான்குடியை பிறப்பிடமாகவும், பதியத்தளாவையை வசிப்பிடமாக்கி 1967ல் தினகரனில் கட்டுரை மூலமும், 1970ல் தினபதியில் கவிதை மூலமும் இலக்கிய மண்ணில் இனங்காணப்பட்டவன்.

இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிவந்த சுமார் ஐம்பது இலக்கிய ஏடுகளிலும், இலங்கை வானொலியிலும், கவிதை, கட்டுரை, கதை, உருவகம், நாடகம், விமர்சனம், என ஐநூறுக்கு மேற்பட்டவைகளை அணி செய்தவன்.

வானொலிக் கவியரங்கு, மேடைக் கவியரங்கு, தலைமைக் கவியரங்குகளில் தளம் பதித்தவன்.

தொடராக 2006ம் ஆண்டு "கலைத்தீபம்" இலக்கிய விருது, 2007ல் "கவிப்பருதி" சாகித்திய விருது, 2008ல் "சாமஸ்ரீதேசமானி" உயர் விருது 2009ல் "கலாபூஷணம்" அரச விருதுகளுக்குள் வீற்றிருப்பவன்.

2008ம் ஆண்டு இலக்கிய ஏடான "செங்கதிர்" அதன் முன் அட்டையில் முகத்தை வெளியிட்டு கௌரவிக்கப்பட்டவன்.

1972ல் "சாவதோ நீதி" என்ற சமூக நாடகத்தை மலையகத்தில் மேடை ஏற்றியவன்.

ஈழத்தில் வெளிவந்த எழுத்தாளர்களின் சிறுகதை, கட்டுரை. கவிதை, நாவல் போன்ற பல தொகுதிகளுக்கு முன்னுரை வழங்கி முத்திரை பதித்தவன்.

பல இலக்கிய மன்றங்களின் பங்காளன் அகில இன நல்லுறவு இயக்கத்தின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளன்.

தமிழிலும் சிங்களத்திலும் எழுதி வரும் இவன் "கலைநதி" என்ற புனைப் பெயருக்குச் சொந்தமானவன்.

பன்னூலாசிரியர்
கலாஜோதி மௌலவி காத்தான்குடி பௌஸ்

ப NOON PRESS, KATTANKUDY, T.P. 065 2248159, 0771677451.